# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## அரபு இலக்கிய நயம் / අරාබි සාහිත්‍ය රසාස්වාදය

தரம் : 11 நேரம்: 3 மணித்தியாலம்

**பகுதி 1,11இலுள்ள எல்லாவினாக்களுக்கும் பகுதி 111 இலிருந்துளவையேனும் இரண்டுவினாக்களுக்குமாகமொத்தம் 5 வினாக்களுக்குவிடைதருக.**

**பகுதி 1**

**01 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சுருக்க விடை தருக.**

1. ஜாஹிலிய்யாக் காலத்தில் அரபு இலக்கியநயம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. அவற்றுள்,
   a) அல் ஹமாஸா (الحماسة)என்பதன் மூலம் நாடப்படுவதுயாது?
   b) அல் ஹம்ரிய்யா(الخمرية) என்றால் என்ன?
2. உமையாக்காலத்தில் அரபிலக்கியம் பெற்றிருந்த செல்வாக்குகள் இரண்டு தருக.
3. சூறா அல் இஸ்ராவின் போதனைகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. அரபுத் தமிழ் என்பதன் மூலம் நாடப்படுவது யாது?
5. "ஆணைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழிக்குப் பொருத்தமான அரபுப் பழமொழியைக் குறிப்பிடுக.
6. முஅல்லகா என்றால் என்ன?
7. أضحى الإسلام لنا دينا وجميع الكون لنا وطنا எனும் கவிதை அடியை தமிழில் மொழி பெயர்க்குக.
8. சுகூன் செய்யப்பட்டமீமைப் பின்தொடர்ந்துவரும் எழுத்துக்களுக்குஏற்பமீமுஸ்ஸாகினாவைஓதுவதற்குரியசட்டங்கள் மூன்றுவகைப்படும். இதில்
   a) இஹ்பாஉஷ் ஷபவிஎன்பதன் கருத்துயாது?
   b) இத்ஆமுஷ் ஷபவிஎன்பதன் மூலம் நாடப்படுவதுயாது?
9. اللهم بك أصبحنا وبك أمسينا وبك نحيا وبك نموت ............ எனும் துஆவை பூரணப்படுதி, ஓதப்படும் சந்தர்ப்பத்தைத் தருக.
10. ஜாஹிலிய்யாக்கால கவிதையின் இரு பண்புகளைக் குறிப்பிடுக.

(02x 10 =20புள்ளிகள்)

**02 பின்வரும் சூறாவை மையப்படுத்திபின்வருவனவற்றிற்குவிடைதருக.**

ترتيبها ٧٤ — سُورَةُ المُدَّثِّر — آياتها ٢٠

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

يَٰٓأَيُّهَا ٱلۡمُدَّثِّرُ ١ قُمۡ فَأَنذِرۡ ٢ وَرَبَّكَ فَكَبِّرۡ ٣ وَثِيَابَكَ فَطَهِّرۡ ٤
وَٱلرُّجۡزَ فَٱهۡجُرۡ ٥ وَلَا تَمۡنُن تَسۡتَكۡثِرُ ٦ وَلِرَبِّكَ فَٱصۡبِرۡ ٧
فَإِذَا نُقِرَ فِي ٱلنَّاقُورِ ٨ فَذَٰلِكَ يَوۡمَئِذٖ يَوۡمٌ عَسِيرٌ ٩ عَلَى ٱلۡكَٰفِرِينَ
غَيۡرُ يَسِيرٖ ١٠

I. மேற்படிசூறாவைமொழிபெயர்க்குக.

II. இந்தசூறாஅருளப்பட்டபின்னனியாது?

III. இச்சூறாவில் காணப்படும் இலக்கியநயத்தைக் குறிப்பிடுக.

IV. عسير ، الناقور ، فكبر எனும் அறபுப் பதங்களின் பொருளை முறையே குறிப்பிடுக.

V. இச்சூறாவின் போதனைகளைக் குறிப்பிடுக.

(05x 05=25புள்ளிகள்)

### பகுதி 11

**03 பின்வரும் கவிதையை வாசித்துகீழுள்ளவினாக்களுக்குவிடைதருக.**

(A

توكلت في رزقي على الله خالقي
وأيقنت أن الله لا شك رازقي
وما يك من رزقي فليس يفوتني
ولو كان في قاع البحار العوامق
سيأتي به الله العظيم بفضله.

I. மேற்படி கவிதையை மொழிபெயர்க்குக.

II. இக்கவிதையில் உள்ள இலக்கியநயத்தைக் குறிப்பிடுக.

III. கோடிடப்பட்டசொற்களின் பொருளைஎழுதுக.

(05x 03 =15புள்ளிகள்)

(B

انَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهْرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ مِنْهُ كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ هَلْ يَبْقَى مِنْ دَرَنِهِ شَيْءٌ؟ قَالُوا: لَا يَبْقَى مِنْ دَرَنِهِ شَيْءٌ. قَالَ: فَذَلِكَ مَثَلُ الصَّلَوَاتِ الْخَمْسِ يَمْحُو اللَّهُ بِهِنَّ الْخَطَايَا.

1. மேற்படி ஹதீஸில் காணப்படும் உவமானம், உவமேயம் என்பவற்றைக் குறிப்பிடுக.
2. ஹதீஸ் உணர்த்தும் போதனைகள் யாவை?

(5x2= 10புள்ளிகள்)

## பகுதி– 111

எவையேனும் இரண்டுவினாக்களுக்குவிடைதருக. (ஒருவினாவிற்கு 15 புள்ளிகள்)

**04 அறபுப் பழமொழிகளுடன் தொடர்பு படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. குற்றமிழைத்த மாணவன் இதன் பிறகு இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட மாட்டேன் என உறுதியளித்த போது அதிபர் அந்த மாணவனுக்கு மன்னிப்பு வழங்கினார். இருப்பினும் குறித்த மாணவர் மீண்டும் அதே குற்றத்தை இழைத்த போது அதிபர் மன்னிப்பு வழங்க மறுத்து விட்டார். இந்நிகழ்வுக்குப் பொறுத்தமான ஒரு அறபுப் பழமொழியைக் குறிப்பிடுக்.
2. வறுமையில் வாடிய அஹ்மத் கடுமையாக உழைத்து வாழ்க்கையில் முன்னேறி செல்வந்தனாக மாறினான். இதற்குப் பொறுத்தமான அறபுப் பழமொழி ஒன்றைக் குறிப்பிடுக.
3. إن الحديد بالحديد يفلح எனும் அறபுப் பழமொழிக்கு ஒத்த தமிழ் பழமொழியொன்று தருக.
4. كما تزرع تحصد எனும் பழமொழிக்குப் பொருத்தமான நிகழ்வொன்றை உமது மொழி நடையில் எழுதுக.
5. لكل جواد كبوة எனும் பழமொழிக்குப் பொருத்தமான தமிழ் பழமொழியை எழுதுக.

(5x3= 15புள்ளிகள்)

**05 பின்வரும் துஆக்களைவாசித்துவிடைதருக.**

1. اللهم رب هذه الدعوة التامة، والصلاة القائمة، آت محمدا الوسيلة والفضيلة وابعثه مقاما محمودا الذى وعدته، إنك لا تخلف الميعاد.
2. اللهم لا سهل إلا ما جعلته سهلا، وأنت تجعل الحزن إذا شئت سهلا.
3. اللهم عافني في بدني، اللهم عافني في سمعي، اللهم عافني في بصري، لا إله إلا أنت، اللهم إني أعوذ بك من الكفر والفقر وأعوذ بك من عذاب القبر، لا إله إلا أنت.

I. மேற்படிதுஆக்களில் இரண்டைமொழிபெயர்க்குக.

II. மேற்படிதுஆக்களில் இரண்டிற்குசந்தர்ப்பம் கூறுக.

III. மேற்படிதுஆக்களில் ஒன்றின் இலக்கியநயத்தைக் குறிப்பிடுக.

(5x3= 15புள்ளிகள்)

**06 பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. சூறதுல் லஹபின் போதனைகள் 02 தருக.
2. சூறதுன் நஸ்ரின் போதனைகள் 02 தருக.
3. சூறதுல் பலக் இறங்கப் பெற்றபின்னணியைக் குறிப்பிடுக.
4. சூறது அபஸ இறங்கப் பெற்ற பின்னணியைக் குறிப்பிடுக.

(2+2=5+6 = 15 புள்ளிகள்)

**07 பின்வருவனவற்றுல் மூன்றிற்குமாத்திரம் சிறுகுறிப்புஎழுதுக**

I. தஜ்வீத் கலை

II. நவீனகாலத்தில் அறபிலக்கியம்

III. ஹதீஸ்களின் முக்கியத்துவம்

IV. துஆக்களின் முக்கியத்துவம்

V. அல்குர்ஆனின் இலக்கிய நயம்

(5x3= 15புள்ளிகள்)